1974 சனவரி 21]

ஆழப்படுத்தும் பொறுப்பு அவரிடம் இப்போது விடப்பட்டுள்ளது. இடைக் காலத்தில், இரவு நேரங்களில் மருத்துவ மனைத் தொட்டி நிரப்பப்படும் நிலை மைகள் மேற்கொள்ளப்பட்டன.

THIRU G. SWAMINATHAN: When this hospital has been constructed at a cost of some lakhs of rupees, may I konw the reason why there was no planning for digging a well or for providing enough water facilities for this hospital ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அந்த மருத்துவ மனை எத்தனை லட்சத்தில் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டது என்பதே தெரியாத நான், இதற்கு எப்படி பதில் சொல்வதென்று தெரியவில்லை.

THIRU G. SWAMINATHAN: Sir, the hospital was built at a cost of Rs. 1,50,000. When the construction of the hospital was planned for, why was there no provision for water? Why was the plan faulty in that respect?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அந்த விளக்கத்தோடு ஒரு கேள்வி வருமானால், அதற்கான தனி விடை கிடைக்கும்.

Financial Assistance for the Thiruvalluvar Gurukulam Patasalai, Madras

* 20 Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether any representation requesting financial assistance from the Government has been received from the Management of the Thiruvalluvar Gurukulam Patasalai, where the children of Narikuravars are studying; and

(b) if so, the action taken thereon by the Government ?

சென்னை திருவள்ளுவர் குருகுல பாடசாலை நிதியுதவி

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையில் நரிக்குறவர்களின் பிள்ளைகள் படிக்கும் திருவள்ளுவர் குருகுல பாடசாலை நிர்வாகியிடமிருந்து அரசுக்கு உதவி கோரி விண்ணப்பம் வந்ததா ?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) தற்போது மதிய உணவுத் திட்டத்திற்கு பாடசாலை நிர்வாகி கோரியுள்ள நிதியுதவி அரிசன நல இயக்குநரின் பரிசீலனையில் இருக்கிறது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவரவர்களே, முழு நேரமாகத் தங்கி அங்கே படிக்கிற மாணவர்களுக்கு வேண்டிய உணவு, உடை ஆகியவைகளுக்கு அவர்கள் விண்ணப்பித்திருக்கிறார்கள். ஆனால் மதிய உணவு பற்றி மட்டும் பரிசீலிக்கப்படுகிறது. ஒரு விடுதியாக்கி, அவர்களுடைய மற்ற கோரிக்கைகளும் பரிசீலிக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, அவர்கள் கோரிக்கை பாடசாலையாக வர வேண்டுமென்பதுதான். அதற்குரிய தொகையான ரூபாய் 25,000 ஐக் கட்டினால்தான் அது ஒரு பள்ளியாக ஏற்றுக் கொள்ளப்படுமென்று கல்வித் துறை விதிகளில் இருக்கிறது. அதற்கு விதிவிலக்கு தரப்பட்டிருக்கிறது. மேலும் மாணவர்களுக்கு வேண்டிய உணவு, உடை, ஆசிரியர்களுக்கு வேண்டிய ஊதியம் இவைகளையும் கேட்டிருக்கிறார்கள். அந்தப் பாடசாலை அங்கீகாரம் செய்யப்பட்ட பிறகு, ஆசிரியர்கள் ஊதியம் போன்றவை தரப்படும். இப்போது அவர்களுக்கு நலத்துறை மூலமாக மதிய உணவு தரப்படும் நிலைமைகள் இருப்பதால், அது இன்றைக்கு நலத் துறை இயக்குநர் பரிசீலனையில் இருக்கிறது.

Special Coaching for Scheduled Caste Candidates to appear for Service Commission Examination

*21 *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Government conducted classes in various centres to coach Scheduled Castes candidates for Group IV Services Examination of the Tamil Nadu Public Service Commission; and

(*b*) if so, the number of such centres and the number of candidates coached during 1972–73;

(*c*) whether any remuneration was given to the teachers who were appointed as tutors in those centres; and

(*d*) if so, the details thereof?